# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 107/மா/2023**

**நாள் : 20.06.2023**

திரு. S. லட்சுமி நாராயணன்,
அம்பத்தூர், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி – எதிர்மனுதாரர்

சென்னை, அம்பத்தூர், கருக்கு மெயின்ரோடு, D.T.P. Colony, பழைய எண்.12/1, புதிய எண்.6 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S. லட்சுமிநாராயணன் என்பவரின் 17.04.2023 நாளிட்ட மனு, 21.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 107/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அம்பத்தூர், கருக்கு மெயின்ரோடு, D.T.P. Colony, பழைய எண்.12/1, புதிய எண்.6, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S. லட்சுமிநாராயணன் என்பவர் தனது 17.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" In the name of LN Dreamway construction, I have taken 6 contract work in Avadi Corporation in general fund and completed work as mentioned below:

- Construction of strom water drain at Kannadhasan street in ward No.16 (M.Book No.56(20/21) Amount 7.20 lakhs)
- Providing Aluminum partition and painting work for mini clinic center at Sekkadu and modern city in ward No.36 & 37.(M.Book No.221(20/21) Amount Rs. 6.75 lakhs)
- Maintenance and repair works at Vilinjiyambakkam 20 bed hospital in ward No.32 (M.Book No.331(20/21) Amount 12 lakhs)

- Construction of RCC culvert at Lakshmipuram road to paruthipattu road in ward No.16 (M.Book No.581(20/21) Amount Rs. 6.45 lakhs.

- Construction of strom water drain at Pandian Nagar South main road in ward No.16(M.Book No.529 (20/21) Amount Rs. 15.60 lakhs)

I have completed the work in accordance with the law and subject to special conditions. Even after the waiting for 2 years, the above money has not arrived till date and I am paying interest of 64,000/- month for that in bank.

Every time I ask for the bill, Corporation Commissioner saying same reason again and again that they don't have fund to clear the bill.

Bill are not cleared as per the seniority basis.

Therefore, sir, I humbly request you to understand the pain I am going through and order Avadi corporation to release the bill amount of Rs. 64,00,000/- immediately." என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 03.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) ஆவடி மாநகராட்சி துணை ஆணையர் தனது 26.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சியில் கடந்த 2020–21ம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனாவால் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூலில் ஏற்பட்ட சரிவு அதன் தொடர்ச்சியாக 2021–22ம் ஆண்டிலும் சற்று வசூலில் சரிவு ஏற்பட்டதால், இம்மாநகராட்சியில் பொது நிதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு தொகை விடுவிக்க போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகையாக ரூ.29.92 கோடி நிலுவையில் இருந்தமையால் அதனை தற்போது 2022–23ம் ஆண்டு மற்றும் 2023–24ம் ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூலில் முன்னேற்றம் அடைந்து வருவதால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் நிலுவையில் உள்ள தொகைகளை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலுவையில் சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு தொகை ரூ.133.08 இலட்சத்தில் இந்நாள் வரை ரூ.70.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்ட தற்போதுள்ள நிலுவை தொகை ரூ.62.90 இலட்சம் சேர்த்து அத்துடன் இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களின் நிலுவை பட்டியல் உள்ள தொகைகளை தற்போது நிதிஆதாரம் சரியாகும் சூழ்நிலையில் வருகிற 31.10.2023க்குள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 08.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 19.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4) மனுதாரர் 08.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"ஆவடி மாநகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரரான நான், அம்மாநகராட்சியில் மழைநீர் வடிகால் அமைத்தல், பழுது நீக்கப்பணிகள், பெயிண்டிங் வேலைகள், அலுமினியம் தடுப்புகள் அமைத்தல், சிறுபாலம் அமைத்தல் (RCC culvert) போன்ற பணிகளை முடித்த வகையில் மதிப்பீட்டுத்தொகையில் எனக்கு ஆவடி மாநகராட்சியிலிருந்து சுமார் 64 இலட்சம் ரூபாய் வரவேண்டியுள்ளது. இது தொடர்பாக முன்னாள் மற்றும் இந்நாள் ஆணையர்களையும், மாநகராட்சியின் பொறியாளர்களையும் நேரில் சந்தித்தும், மனுக்கள் அளித்தும் எனக்கு சேரவேண்டிய நிலுவைத்தொகையை வழங்குமாறு பலமுறை கேட்டு வருகிறேன். மேற்கண்ட நிலுவைத்தொகையை மாநகராட்சியில் கோரும்போது, சம்பளம் போடுவதற்கே நிதியில்லை என கடந்த 2 ஆண்டு காலமாகவே கூறிவருகின்றனர். இதனால் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் பெரும் பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ளது. பெரும்தொகை முடங்கிவிட்ட காரணத்தால், எனக்கு வேறு எங்கும் ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்ள இயலவில்லை.

எனவே ஆவடி மாநகராட்சியிலிருந்து எனக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையான ரூபாய் 64 இலட்சத்தை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள 17.04.2023 நாளிட்ட எனது மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) ஆவடி மாநகராட்சியின் இளநிலைப்பொறியாளர் 08.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" ஆவடி மாநகராட்சி வார்டு எண்.8,16ல் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள், வார்டு எண். 32 விளிஞ்சியம்பாக்கத்தில் உள்ள மாநகராட்சி மருத்துவமனையை பழுதுபார்க்கும் பணி, ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16ல் சிறுபாலம் (RCC culvert) ஆகிய பணிகளை எஸ்.என்.டிரீம்வே கன்ஸ்ட்ரக்ஷன் என்கின்ற நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கானத் தொகை ரூ.133.08 இலட்சத்தில் இதுவரை 70.18 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது. நிலுவைத்தொகையான ரூபாய் 62.90 இலட்சம் இன்னும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. மேற்கண்ட தொகை மாநகராட்சியின் நிதி ஆதாரம் சரியானவுடன் விரைவில் வழங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரருக்குப் பின்னர் ஆவடி மாநகராட்சியில் ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்ட மற்ற ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தத்தொகை வழங்கப்பட்டுவிட்டதா என்கின்ற விவரம் எனக்கு தெரியவில்லை" என தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், ஆவடி மாநகராட்சியின் இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி துணை ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

7) ஆவடி மாநகராட்சியிலிருந்து சுமார் ரூ.64 இலட்சம், ஒப்பந்தப்பணிகள் மேற்கொண்டவகையில் மனுதாரர் தனக்கு வழங்கப்பட வேண்டிய தொகையானது கடந்த 2 வருடமாக வழங்கப்படாமல் உள்ளது எனவும், மேற்கண்ட நிலுவைத்தொகை குறித்து முன்னாள் மற்றும் இந்நாள் ஆணையர்களிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் ஆவடி மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை என தெரிவித்து அந்நிலுவைத் தொகையினை ஆவடி மாநகராட்சி வழங்கிட ஆவன செய்யுமாறும் மனுதாரர் இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

"ஆவடி மாநகராட்சி இளநிலைப்பொறியாளர், மனுதாரர் ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்டவகையில் நிலுவைத்தொகையான ரூபாய் 62.90 இலட்சம் இன்னும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. மேற்கண்ட தொகை மாநகராட்சியின் நிதி ஆதாரம் சரியானவுடன் விரைவில் வழங்கப்படும் எனவும் மனுதாரருக்குப் பின்னர் ஆவடி மாநகராட்சியில் ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்ட மற்ற ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தத்தொகை வழங்கப்பட்டுவிட்டதா என்கின்ற விவரம் எனக்கு தெரியவில்லை" எனவும் தெரிவித்துள்ளார். மேலும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையர் தனது கடிதத்தில் 2022–23ம் ஆண்டு மற்றும் 2023–24ம் ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூலில் முன்னேற்றம் அடைந்து வருவதால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் நிலுவையில் உள்ள தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலுவையில் சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு தொகை ரூ.133.08 இலட்சத்தில் இந்நாள் வரை ரூ.70.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்ட தற்போதுள்ள நிலுவை தொகை ரூ.62.90 இலட்சம் சேர்த்து அத்துடன் இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களின் நிலுவை பட்டியல் உள்ள தொகைகளை தற்போது நிதிஆதாரம் சரியாகும் சூழ்நிலையில் வருகிற 31.10.2023க்குள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

1. ஆவடி மாநகராட்சியின் வரிவசூல் முன்னேற்றம் அடைந்து வருவதாக துணை ஆணையர் தெரிவித்துள்ள நிலையில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையினை **மேலும் தாமதமின்றி** வழங்கிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2. மனுதாரருக்கு ஒப்பந்தப்பணி முடிந்து வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையினை அன்னாருக்கு வழங்கும் முன்னரே அவருக்குப்பின்னர் ஒப்பந்தப்பணிகளை முடித்த மற்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தொகை வழங்கப்பட்டிருக்கலாம் என இம்முறைமன்றம் ஐயப்பாடோடு நோக்குகிறது.

3. இம்மனுதாரருக்கு தரவேண்டிய நிலுவைத்தொகையினை வழங்காமல், இவருக்கு பின்னால் ஒப்பந்தப்பணியில் கலந்துக் கொண்டு பணிகளை முடித்தவர்களுக்கான நிலுவைத்தொகையை வழங்கக்கூடாது எனவும் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

4. மேலும் ஒப்பந்தப்பணி முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிட வேண்டிய நிலுவைத்தொகையை காலதாமதம் செய்திடாமலும், பாரபட்சமின்றியும் வழங்குவதற்கு தேவையான அறிவுரைகளை அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பிட நகராட்சி **நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.**

5. மேலும் ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்ட வகையில், தொய்வின்றியும், குறைகளின்றியும் பணிகளை முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு சேரவேண்டிய நிலுவைத்தொகையை காரண காரியமின்றி நிறுத்தி வைக்கும் மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

Two years is a substantially long period of delay in the settlement of dues to the petitioner by the Avadi Corporation. At least the Corporation could have disbursed the balance in installments convenient depending on the financial strength and stability of the Local Body. It is hard to believe that the Corporation is not clearing the dues of all the contractors as no such claim has been made by the Local Body. The Engineer is evasive and slippery in his deposition saying that he is not certain whether dues are being settled to other contractors who executed their allocated works after the petitioner had completed his works. This creates valid suspicion in the mind of the Forum as to the credibility of the report of the Corporation. The Corporation will have to face further loss of funds in case if the petitioner moves the Judicial Forum for payment of interest and damages for the delay in the settlement. Hence the DMA is directed to issue necessary instructions to all Urban Local Bodies, excluding the Town Panchayats, to adhere to fiscal discipline, first come and first served principle and strict objectivity while clearing the dues to various stakeholders without fear or favour.

2023–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S. லட்சுமிநாராயணன்,
   பழைய எண்.12/1, புதிய எண்.6,
   D.T.P.colony.
   கருக்கு மெயின் ரோடு,
   அம்பத்தூர்,
   சென்னை – 600 053.
2. ஆணையர்,
   ஆவடி மாநகராட்சி,
   ஆவடி.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா.அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.
4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா.அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்